செய்தி வெளியீடு எண்:542 நாள்:21.11.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** அறிவிக்கப்பட்ட சம்பா நெல் சாகுபடி தொகுப்பு திட்டம் செயலாக்கம், டெல்டா மாவட்டங்களில் சம்பா நெற்பயிர்களின் நிலை மற்றும் திட்டப்பணிகள் குறித்து, 21.11.2016 இன்று **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்** ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின்போது தற்போது உள்ள சூழ்நிலையில் டெல்டா மாவட்டங்களில் சம்பா மற்றும் தாளடிப் பருவங்களில் நேரடி நெல் விதைப்பு முறை மூலம் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிர்களின் தற்போதைய நிலை குறித்தும், சமீபத்தில் பெய்துள்ள மழையினால் இப்பயிர்களுக்கான நிலவும் சாதகமான சூழ்நிலை தொடர்பாக விரிவாக கேட்டறிந்தார்கள்.

பின்பு, சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.8.2016 அன்று 110 விதியின்கீழ் ரூ.64.30 கோடி நிதி** ஒதுக்கீட்டில் டெல்டா மாவட்டங்களுக்காக அறிவித்த சம்பா நெல் சாகுபடி தொகுப்பு திட்டம் செயலாக்கம் குறித்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட ரீதியாக ஆய்வு மேற்கொண்டார்கள். **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** சம்பா நெல் சாகுபடி தொகுப்பு திட்டத்தினை முழுமையாக செயல்படுத்தி உணவு தானிய உற்பத்தி இலக்கினை முழுமையாக அடைவதற்கு, துறை அலுவலர்கள் டெல்டா மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் திட்டக்கூறுகளை முழுமையாக செயல்படுத்திட அறிவுரை வழங்கினார்கள்.

மேலும் களப்பணியாளர்கள் கிராமங்கள் தோறும் சென்று அவ்வப்போது ஏற்படும் களப்பிரச்சனைகளை கண்டறிந்து அப்பிரச்சனைகள் களைந்திட தக்க ஆலோசனைகள் வழங்கிட அறிவுறுத்தினார்கள். சம்பா சாகுபடி பயிரில் அதிகபட்ச உற்பத்தி திறனை அடையும் வகையில் வேளாண்மைத்துறை அலுவலர்கள் முனைப்புடன் செயல்பட அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வேளாண்மைத்துறையின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வேளாண்மைத்துறை இயக்குநர், வ.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், திருமதி. அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை) திருமதி. சு. செந்தாமரை, இ.ஆ.ப., மற்றும் வேளாண்மை பொறியியல் துறை தலைமை பொறியாளர் வி. தேவேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: –இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**